No. C-23/2024 25.11.2024

# இறைமக்கள் பேரவை 2024

**அன்பிற்கினிய அருள்பணியாளர்களே, அன்பு மக்களே,**

**நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அன்பும் அமைதியும் உங்களுக்கு உரித்தாகுக !**

நாம் மிகவும் நேசிக்கும் நம் கோட்டாறு மறைமாவட்டம் நூற்றாண்டுகள் அளவான நெடிய கத்தோலிக்க நம்பிக்கை வரலாறு கொண்டது. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருத்தூதர்களில் ஒருவரான புனித தோமாவின் வருகைத் தொடங்கி, நம் ஞானத்தந்தையான மறைமாவட்டப் பாதுகாவலர் புனித பிரான்சிஸ் சவேரியாரின் தன்னிகரற்ற நற்செய்திப் பணிகள் வழியாக இக்காலத்திலும் தொடர்வது. ‘‘பொதுநிலையினர் உலகியல் அமைப்பைப் புதுப்பிப்பதைத் தமக்கே உரித்தான கடமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்’’ (பொதி.7) என்கிற இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் உணர்வினைத் தான் வாழ்ந்த காலத்திலேயே உளம் ஏற்று, கிறிஸ்துவில் ஆழ்ந்த பற்றுறுதிக் கொண்ட சீடராகச் சமுதாய அடிமை அமைப்புகளை எதிர்த்து போராடி மறைசாட்சியாய் கொலையுண்ட புனித தேவசகாயம் வழி இன்றும் தொடர்ந்து வருகின்ற நம்பிக்கை பயணம் நமது.

நம் நம்பிக்கை பயணத்தின் சிறப்புறு ஒரு மைல்கல்லாக அமைந்ததே தாய் மறைமாவட்டமான கொல்லம் மறைமாவட்டத்திலிருந்து நாம் கோட்டாறு தலத்திருஅவையாக மே 26, 1930இல் உருவானதைக் கூறலாம். முதல் ஆயராகப் பணியாற்றிய ஆயர் லாரன்சு பெரேரா தொடங்கி, ஏறத்தாழ கடந்த ஒரு நூற்றாண்டளவாகக் கடவுள் நமக்குக் கொடையாகத் தந்த மேனாள் ஆயர்கள் தாங்கள் அருள்பணியாற்றிய ஒவ்வொரு காலக்கட்டத்திலும் கடவுளின் விருப்பமறிந்து நம் மறைமாவட்டத்தை உலகளாவிய திருஅவை தரும் ஆசிரியத்தின் வழியிலும் நம் மண்ணின் வாழ்வியல் ஒளியிலும் நற்செய்திப் பணியைத் தலைசிறந்த விதத்தில் ஆற்றியதன் பலனே கோட்டாறு மறைமாவட்டம் இன்று பெருமைக்கொள்கின்ற பங்கேற்புத் திருஅவை என்பேன். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் உணர்வினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க ‘கோட்டாறு மறைமாவட்டத்தில் கிறிஸ்தவ வாழ்வும் பணியும் 1986’ ஏட்டினை இதற்குத் தக்கதோர் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். ‘அடிப்படை மாற்றத் திருஅவை’ என்பதைக் கோட்டாறு மறைமாவட்ட இலட்சியக் கனவாகக்

கொண்டு மாறிவருகின்ற இக்காலச் சூழல்களிலும் இறையாட்சிச் சமூகமாக நம்மைச் செயல்பட இதுவே அறைகூவல் விடுக்கிறது. அதன் அடியொற்றியே நம் மறைமாவட்டம் மீண்டும் 'இறைமக்கள் பேரவை 2000'ஐ நிகழ்த்தியது.

ஏறத்தாழ கால் நூற்றாண்டுக் காலத்தில் மாறிவருகின்ற காலச்சூழல்களில் எழுகின்ற கரிசனைகளை காலத்தின் அறிகளாகவும் கடவுளின் அழைப்பாகவும் கண்டு, நம் மறைமாவட்ட நம்பிக்கை பயணம் திருத்தந்தை பிரான்சிஸ் வழிகாட்டுவதுபோல எங்ஙனம் "இணைந்து பயணிக்கும் கோட்டாறு திருஅவையாக" உருவாகவும் வாழவும் பணிகள் செய்யவும் முடியும் எனப் பல மட்டங்களிலும் கட்டங்களிலும் உணர்ந்ததன் விளைவே 'இறைமக்கள் பேரவை 2024'. இது ஒரு வரலாற்று நிகழ்வு மட்டுமல்ல; ஓர் அருள் நிகழ்வு.

தக்கத் தயாரிப்புகளுடன் கடந்த நவம்பர் 1, 2023, புனிதர்கள் அனைவரின் பெருவிழா அன்று கோட்டாறு புனித பிரான்சிஸ் சவேரியார் பேராலயத்தில் நடந்தேறிய 'இணைந்து பயணிக்கும் கோட்டாறு திருஅவை'க்கான இறைமக்கள் பேரவை 2024–ன் தொடக்க விழாவும் அதனைத் தொடர்ந்த திருப்பலியும் நம் நினைவிலிருக்கலாம். ஓராண்டுக் கால தயாரிப்புகள், பல நிலைப் பயிற்சிகள், பங்கேற்புகள், இறைமக்கள் குரல்கள் எழுப்பிய கரிசனைகளைக் கேட்டறிதல், பங்களவிலும், மறைவட்டங்கள் – மறைமாவட்டத்திலும் தொகுத்தல் என நிறைவுற்று, "திருஅவைக்குத் தூய ஆவியார் கூறுவது என்ன?" (காண். திவெ 2:7) என்னும் இறைவார்த்தைகளுக்கேற்ப நம் கோட்டாறு தலத்திருஅவைக்கு இக்காலத்தில் கடவுளின் விருப்பம் என்ன என்பதை மறைமாவட்ட இறை மக்களாகிய நாம் ஆயரின் தலைமையில் ஒன்றுகூடி, தெளிந்து தேர்ந்திட்ட அருமையான ஓர் அருள் நிகழ்வே 'இறைமக்கள் பேரவை 2024'. இது திட்டமிட்டிருந்தபடி, நவம்பர் 15, 16, 17 ஆகிய நாட்களில் நாகர்கோவில் ஹோலி கிராஸ் கல்லூரியில் நடந்ததையும் நாம் நன்கறிவோம்.

இறைமக்கள் பேரவையில் என்னோடு நம் மறைவட்ட அருள்பணியாளர்கள் பலர் உட்பட எல்லாப் பங்குகள் / கிளைப் பங்குகளின் பிரதிநிதிகள், மறைவட்ட, மறைமாவட்ட அருள்பணிப் பேரவைகளின் பிரதிநிதிகள், அருள்பணிக்குழுக்கள், பங்கேற்பு அமைப்புகளின் பிரதிநிதிகள், துறவியர் பேரவைப் பிரதிநிதிகள், சகோதர திருஅவைப் பார்வையாளர்கள் என ஏறத்தாழ முன்னூறுக்கு மேற்பட்டவர்கள் மூன்று நாட்கள் பங்கேற்றோம். இந்நாட்கள் நம் ஒட்டுமொத்த மறைமாவட்ட இறைமக்களாக உங்களின் சிறுகுரல்களும் வெளிப்படுத்திய கரிசனைகளையே காலத்தின் அறிகுறிகளாகக் கொண்டு 'தூய ஆவியாரில் உரையாடிய' புதிய பெந்தகோஸ்தே

நிகழ்வாக அமைந்தன. இக்காலத்தில் நம் கோட்டாறு தலத்திருஅவைக்குக் கடவுளின் திருவுளம் என்ன என்பதைத் தெளிந்து தேர்ந்த அருமையான ஆன்மீக அனுபவமாகவும் இருந்தது. இதனை உங்களோடுப் பகிர்ந்து கொள்ளவே விரும்பினேன்; பகிர்ந்து கொண்டதில் மகிழ்கிறேன். ஆனால், இத்தோடு இறைமக்கள் பேரவையின் நோக்கம் நிறைவேறிவிட்டது என்பது பொருளல்ல. இது ஒரு தொடக்கம். இதன் அடியொற்றி நாம் இணைந்து பயணிக்கும் கோட்டாறு திருஅவையாக உருவாகப் பல நிலைகளிலும் வழிகளிலும் தொடரும் என்பதையும் அன்போடுத் தெரியப்படுத்துகின்றேன்.

இந்நேரத்தில் இறைமக்கள் பேரவைச் சிறப்புற நடைபெற தொடக்கத்திலிருந்தே தன்னலமின்றி உழைத்தவர் பலர். முதன்மையாக ஒருங்கிணைப்பாளர்கள், துணைக்குழுக்கள், தன்னார்வலர்கள் என அனைவருக்கும் நன்றி. அதைவிட மேலாக, நம் பங்குகள் – கிளைப் பங்குகளின் அருள்பணிப்பேரவைகள், அன்பியங்கள், பிற பங்கேற்பு ஆமைப்புகள், பயிற்சியாளர்கள், பங்குகளின் மற்றும் மறைவட்டங்கள் – மறைமாவட்டத் தொகுப்பாளர்கள், இன்னும் ஏதோ ஒரு வகையில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றி. நெஞ்சத்தின் நிறைவாக இறைமக்கள் பேரவை 2024க்குத் தங்கள் முழு ஒத்துழைப்புத் தந்து நம் மறைமாவட்டத்தில் அர்ப்பணத்தோடு அருள்பணியாற்றுகின்ற என் சகோதர அருள்பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இறுதியாக, இறைமக்கள் பேரவையின் முன்மொழிவுகளும் பரிந்துரைகளும் தக்க விதத்திலும் விரைவிலும் தொகுக்கப்பட வேண்டும். அப்பணிகளும் செவ்வனே அமைய உங்கள் இறைவேண்டலில் நினைவுகூர்ந்திட அன்புடன் கேட்கின்றேன்.

தாழ்மையான உள்ளத்தோடு “நான் ஆண்டவரின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்” (லூக் 1:38) எனக் கூறி கடவுளுக்குத் தன்னை அர்ப்பணித்த அன்னை மரியாவின் அருள்துணை நம்மோடு இருப்பதாக!

கிறிஸ்துவின் மனநிலையில்
Sd/-
+ **ஆயர் நசரேன் சூசை**
கோட்டாறு மறைமாவட்டம்.

---

**குறிப்பு:** இந்தச் சுற்றுமடல் நமது மறைமாவட்டத்தின் அனைத்து ஆலயங்களிலும் நிறுவனங்களிலும் 01.12.2024 அன்று ஞாயிறு திருப்பலியில் வாசிக்கப்பட வேண்டும்.